## பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர்கொள்ளல்.

**இந்நோயினால் ஏற்படும் செலவீனங்களைச் பொருத்தமாகக் கையாளுதல் -**

- தேவையேற்படின் புற்றுநோயாளர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- அரசாங்கத்தினால் வழங்கப்படும் பொருளாதார உதவிபற்றி அறிந்திருங்கள்.
- இலாப நோக்கற்ற மற்றும் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்படும் நோய்தணிப்புச் சிகிச்சை மற்றும் சேவைகளைத் தேவையேற்படும்போது பெற்றுக்கொள்ளுங்கள்.
- சரியான ஆலோசனைகளைப் பொருத்தமான வல்லுனர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதன் மூலம் தேவையற்ற பணவிரயத்தைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

**வேலையில் தொடர்தலும் பணவருவாயைத் தக்கவைத்தலும்.**

- உங்களின் நோய் நிர்ணய அட்டை அல்லது உறுதிப்படுத்தப்பட்ட கடிதங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் உங்களுக்குரிய உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.
- சுய தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களை, தொடர்ந்து அப்பணியில் ஈடுபட ஊக்குவியுங்கள்.
- அரசாங்கத்திடமிருந்து அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து உதவியைப் பெற்று சுயதொழில் வாய்ப்புக்கள் அல்லது சிறு குடிசைத் தொழில் முயற்சிகளில் ஈடுபட ஊக்குவியுங்கள்.

## ஆன்மீக பலத்தை தொடர்ந்து பெற்றுக் கொள்ளல்.

**ஆன்மீக வழிபாடுகளில் ஈடுபட ஏதாவது தடைகள் ஏற்படுமாயின் அவைகளை வெற்றி கொள்ள பொருத்தமான ஆலோசனையை வழங்குங்கள்.**

- ஆன்மீக வழிபாடுகளை நடத்துவதற்குரிய பொருத்தமான இடத்தை ஏற்பாடு செய்து கொடுங்கள்.
- ஆன்மிக வழிபாடுகளில் ஈடுபட வசதியாக தொலைக்காட்சிப்பெட்டி, வானொலி, இறுவட்டு இயக்கி போன்றவற்றை அவர்களுக்கு வழங்குங்கள்.

## உளவள ஆலோசனையை வழங்கும் அரச நிறுவனங்கள் -

- மகரகம, தேசிய புற்றுநோய் நிறுவனத்தில் அமைந்துள்ள உளவள ஆலோசனை நிலையம். (PALS-0112842052)
- மாகாணம் தோறும் அமைந்துள்ள புற்றுநோய்ச் சிகிச்சை நிலையங்கள்.
- மாவட்டச் செயலகங்களினால் வழங்கப்படும் உளவள ஆலோசனைச் சேவைகள்.

**நோய் தணிப்புச் சிகிச்சையை வழங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்.**

- இலங்கை புற்றுநோய்ச் சங்கம். தொலைபேசி - 0112585879.
- "கான்சர் கேர் அஸோசியேசன்".தொலைபேசி - 0113155229.
- "மித்துருவெல" உதவும் வலைப்பின்னல்.
- "சத்ய ஸாயி சுவசெவன", கங்வெல்ல. தொலைபேசி - 0112687014, 0362254902.
- "பிலிகா சுவசரண சாது சமாஜய", கம்பகா. தொலைபேசி - 0714450147, 0714454788.
- "கேன்" - Cancer Aid North & East, யாழ்ப்பாணம்.
- "சகன சுவ". தொலைபேசி - 0117600444.

## புற்றுநோயாளர்களுக்குரிய பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொள்வது எப்படி?

புற்றுநோயாளர்களுக்குரிய பொருளாதார உதவிகளுக்குரிய விண்ணப்பப் படிவங்களை உங்கள் பிரதேசத்திலுள்ள மாவட்ட செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்ட உங்கள் விண்ணப்பத்தை, உங்கள் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவை உத்தியோகத்தரிடம், பின்வரும் பத்திரங்களையும் இணைத்துக் கையளியுங்கள் (அதியுச்ச மாதாந்த உதவிப் பணம் ரூபா. 500.00)

- உங்கள் பிரதேச கிராம சேவை அலுவலரால், உங்கள் மாதாந்த வருமானம் ரூபா. 6000.00 க்கு குறைவு என உறுதிப்படுத்தப்பட்ட உறுதிக் கடிதம்.
- உங்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்திய நிபுணர் அல்லது அரசாங்க வைத்திய சாலைகளில் வழங்கப்படும் நோய் நிர்ணய அட்டையும் ஏற்கனவே உள்ள பத்திரத்தின் பூரணப்படுத்தப்பட்ட வடிவமும் சேர்த்து கையளிக்கப்பட வேண்டும்.

உங்கள் உடல், மன நிலை பற்றிய ஆலோசனைகள், சிகிச்சைகள் தேவைப்படும்போது, உங்கள் குடும்ப வைத்தியர், உங்கள் பிரதேச வைத்தியசாலை அல்லது நோயாளி கிரமமாகச் சிகிச்சை பெறும் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையங்களையே நாடுங்கள்.

உங்கள் புற்றுநோய் சம்பந்தமான சமூக, பொருளாதார, மற்றும் பிற ஆலோசனைகள் தேவைப்படும்போது பின்வருவோரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

- சுகாதார வைத்திய மாது.
- பொதுச் சுகாதாரப் பரிசோதகர்.
- பொதுச் சுகாதார தாதியப் பரிபாலகி.
- பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி.
- கிராம சேவை உத்தியோகத்தர்.
- பிரதேசச் செயலக சமூக சேவை உத்தியோகத்தர்கள்.

**தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்**
**சுகாதார அமைச்சு.**


தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்.
555/5, எல்விற்றிகல மாவத்தை, நாரகேன்பிட்ட, கொழும்பு 05.
தொலைபேசி - 0112368627, 0113159227.
அவசர உதவி எண் - 0715320320.


இக்கையேடு, புற்றுநோயாளிகளின் குடும்பத்தினர்க்கும் அவர்களைப் பராமரிக்கும் உதவியாளர்களுக்குமானது.

# புற்றுநோயாளர்களுக்கு நிறைய விடயங்களில் உங்களால் உதவ முடியும்!



யாருக்கும் புற்றுநோய் வரலாம்.
புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு, நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கவும் அதன் மூலம் புற்றுநோயைப் பூரணமாகக் குணமாக்கவும் முடியும்.

புற்றுநோய் ஒரு தொற்றா நோயாகும்.
எனவே இந்நோய் பற்றிய பயம் தேவையில்லை.

புற்றுநோயாளர்களே, உங்கள் புற்றுநோய் நிபுணரை கலந்தாலோசித்து உங்களுக்குரிய சரியான சிகிச்சையை மிக ஆரம்பத்திலேயே பெற்றுக் கொள்ளுங்கள்.
உங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சையை சரியான நேரத்தில் சரியான அளவில் கிரமம் தவறாமற் பெற்றுக் கொள்ளுங்கள்.

இதனால் ஏற்படும் வலி, உடல், மன உபாதைகளுக்குரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள உங்கள் வைத்தியரை எப்பொழுதும் நாடுங்கள்.